

சேலம் மாவட்டம், வனவாசியில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான கைத்தறி பூங்காவினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### மார்ச்.10இல் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சியில்

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு, மார்ச். 9-

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-

ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலை திறப்பு விழா 10.03.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்க உள்ளார்கள்.

எனவே, இந்நிகழ்ச்சியில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தோழமை அமைப்பு நிர்வாகிகள், தி.மு.கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BLC, BDA, கழகத்தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திராவிட மாடல் முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

# தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. சார்பாக தமிழ்நாடு முழுவதும் நல உதவிகள்!

## மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்!

சென்னை, மார்ச். 8-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் நபர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொ.மு.ச. சார்பாக நடைபெற்றது.





மார்ச் -1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

**நலஉதவிகள்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள தூய்மைப் பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 நபர்களுக்கு ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்பட்டது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

அப்பொழுது தொழிலாளர்களிடம் மத்தியில் பேசிய சங்க மாநில பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சராக ஐந்து முறை ஆட்சி புரிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு மக்களுக்கு வழங்கிய திட்டங்களால் மக்களின் வாழ்வு மேம்பட வைத்தார்கள் என்று எடுத்துரைத்தார்கள்.

அன்புத்தளபதி மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்கிய சலுகைகள்:

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரோனா பெருந்தொற்று நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பணி பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன் போனஸ், அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர செய்தார்கள்.

**தமிழ்நாடு மக்களுக்கான திட்டங்களில் சில:**

கலைஞரின் கனவு இல்லம்

தமிழ்நாட்டில் 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

வேலைக்காகவும், கல்விக்காகவும் பயணிக்கும் பெண்களுக்கு விடியல் பயணத் திட்டம்.

உயர் கல்வியை ஊக்குவிக்க 5.29 இலட்சம் மாணவி களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்.

20.59 இலட்சத்திற்கு மேலான குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

21.70 இலட்சத்திற்கும் மேலான மாற்றுத் திறனாளிகள், மற்றும் முதியவர்களுக்கு நேரடி ரேசன் பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டம்.

பணி மற்றும் கல்வி நிமித்தமாக வெளியூர் செல்லும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு தமிழ்நாடு முழுவதும் தோழி விடுதித் திட்டம்.

ஆதரவற்ற முதியவர்கள், சுயமரியாதையோடு வாழ்வதற்காக மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் உதவித்தொகை திட்டம்.

1256 உயர்தர மருத்துவமையங்கள் மூலம் தமிழ்நாடெங்கும் இலவச மருத்துவ சேவைகள் வழங்கும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். என்று சிவில் சர்வீஸ் தேர்வுக் கென்று உருவாக்கப்பட்ட நான் முதல்வன் திட்டம்.

கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்.

கற்றல் இடைவெளியை குறைக்கும் இல்லம் தேடி கல்வித் திட்டம்.

கைம்பெண்களுக்கு மாத உதவித்தொகை ரூ.1200

பள்ளிகள் மேம்பாட்டிற்கு பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், நம்ம ஊரு, நம்ம பள்ளி

சாலை மேம்பாட்டிற்கு முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்.

ஆதிதிராவிட இளையோரை தொழில் முனைவோருக்கும் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டம்.

தமிழ் மரபை இளையோரிடம் கொண்டு சேர்க்க மாபெரும் தமிழ்க் கனவு திட்டம்.

மின் புகார்களை நுகர்வோர் 24 மணிநேரமும் தெரிவிக்க மின்னகம்”

1.70 இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு

தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பிக் போட்டிகள், சர்வதேச ஹாக்கி போட்டிகள், சர்வதேச சார்ஃபிங் போட்டிகள், ஸ்குவாஷ் உலக போட்டிகள், முதல் முறையாக தமிழ்நாட்டில் கேலோ இந்தியா போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு ஊக்கத்தொகை என விளையாட்டுத்துறை மேம்பாடு.

**எல்லோருக்கு எல்லாம்**

மகளிர், மாணவ, மாணவிகள், பள்ளி குழந்தைகள், முதியோர்கள் மாற்றுத் திறனாளிகள் என எல்லோருக்கு எல்லாம் ஆன தமிழ்நாடு மக்கள் போற்றும் திராவிட மாடல் ஆட்சி வழங்கும் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளில், அவர்களின் நல் பொற்கால ஆட்சி தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என சூளுரைப்போம் என்று தொழிலாளர்கள் மத்தியில் மின்கழகத் தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் எடுத்துரைத்தார்.



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளருமான பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன். இனிப்புகள் வழங்கி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, பொருளாளர் கதிரவன் , பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் , பேரூராட்சி தலைவர்கள் அம்சவேணிசெந்தில்குமார், தம்பிதுரை, ஒன்றிய செயலாளர்கள் தேங்காய். சுப்பிரமணி, சரவணன், குண.வசந்தரசு, செந்தில் ,பேரூர் கழக பொறுப்பாளர் பாபு, மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் , அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் பொதுமக்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

### திராவிட மாடல் அரசர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும்

# திருச்சி மாநாட்டிற்கு தீரர்கள் அலைகடலென திரண்டு வாரீர்!

## மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்,முருகன் எம்,எல்,ஏ வேண்டுகோள்!

மயிலாடுதுறை. மார்ச். 9-

தீரர் கோட்டமாம் திருச்சிக்குத் திரண்டுவா உடன் பிறப்பே ! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட உறுதியேற்றுக் களம் காண்போம்!” என்று தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று திருச்சியில் இன்று 9-ஆம் தேதி மாலை நடைபெறும் கழக மாநில மாநாட்டிற்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து கிளை, வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு வரும்படி மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் தி.மு.கழகத்தின் ‘ஸ்டாலின்

தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற தேர்தல் சிறப்பு மாபெரும் கழக நிர்வாகிகள் மாநாடு இன்று 9-ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் திருச்சி சிறுகனூரில் மிகவும்



கோலாகலமாக நடைபெற உள்ளது. 10 லட்சம் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் மிகவும்பிரம்-மாண்டமான முறையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.“தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் திரள்வோம்! திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைப்போம்! திருச்சிக்கு திரண்டு வா உடன்பிறப்பே!” என்று உள்ளன்பு டன் உடன் பிறப்புகளுக்கு கடிதம் எழுதி மகிழ்ச்சியுடன் அழைத்துள்ளார்.

திருச்சியில் நடைபெறும் இம்மாபெரும் மாநாடு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய அன்புத்தலைவர் தளபதி அவர்கள் அடையப்போகும் இமாலய வெற்றிக்கு இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வகையில் 10 லட்சம் தி.மு.க. தீரர்கள் திரண்டு சரித்திர சாதனையை படைத்தனர் என்று இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறும் வகையில் திருப்புமுனை மாநாடாக அமைய உள்ளது.

கழகத் தலைவர் திராவிட மாடல் அரசர் தளபதி அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் - கழக தீரர்கள் அனைவரும் கொள்கை தீரர்களாக தலைவரின்சிப்பாய்களாக பெரும்படையாக திரண்டு வந்து இம்மாநாட்டை வெற்றியடைச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சரித்திர சாதனை படைக்க உள்ள இம்மாபெரும் மாநாட்டில் கலந்து கொள்வது “நமது உரிமை” மற்றும்”நமது கடமை” என்ற அந்த லட்சிய உணர்வோடு மயிலாடுதுறை மாவட்டம் முழுவதிலும் இருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள், கழக தீரர்கள் அனவைரும் இன்று 9-ஆம் தேதி மாலை 3.00 மணிக்கெல்லாம் திருச்சி சிறுகனூர் மாநாட்டு திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து . பங்கேற்கும் படி அன்புடன் கேட்டுக்கொள்வதோடு,

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்காக ஒப்பாக இதுவரை இதுப்போன்ற பிரம்மாண்டமான மாநாடு நடைபெற்றது இல்லை என்று அனைவரும் கூறும் வகையில் நம்முடைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கழகத்தினரும் அலைகடலென திரண்டு வாரீர்!!

வாரீர் !! என்று அகமகிழ்ந்து அன்புடன் அழைக்கிறேன். மாற்றுக் கட்சியினரும் மிரண்டு போகும் வகை-யில், வருகிற 2026-ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.மு.க. தான் ஆட்சிக்கு வரும் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாடு சரித்திர சாதனையை படைக்கும். இவ்வாறு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.


# அண்ணா காட்டும் வழியிலே...

தமிழ் நாடென்ற நிலப்பரப்பையும்... இரு மொழிக் கொள்கை என்ற சட்டத்தின் மூலம் "தமிழ் மொழி" என்ற வழிகாட்டியையும் நம்மிடம் தந்துவிட்டுப் போன எங்கள் அண்ணன், தமிழக முதல்வராக பதவி ஏற்ற நாள் இன்று. எங்கள் அண்ணனின் வாழ்க்கையே பாடமாய் அமைந்தது! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு... அவரது கோட்பாடுகள்! ஆட்சிக்கும் கட்சிக்கும் இடையில் ஒரு கோடு. கட்சிக்கும் குடும்பத்துக்கும் இடையில் ஒரு கோடு. அந்த இருகோடுகளையும் தாண்டுவதற்கு யாருக்கும் அவர் அனுமதி அளித்ததில்லை.

அறிவைப் பரப்பி, அன்பை வளர்த்து, பகுத்தறிவை உணர வைத்து, சமநோக்குப் பார்வையினால் குடும்பப் பாசத்தை உருவாக்கி, விரும்பாதவர்களையும் விரும்பிப் போய்ப் பார்த்து... கழகத்தை ஒரு அரசியல் கட்சியாக மட்டும் நடத்தாமல்... தமிழ் மக்களின் பெரும் குடும்பத்தின் நல்லது கெட்டது என எல்லா நிகழ்வுகளிலும் பங்கேற்கும் ஒரு பாதுகாப்பு இயக்கமாக வளர்த்தெடுத்தவர் அண்ணா. அவர் ஏற்றிய அந்த கொள்கை தீபம்... இன்னமும் ஒளிபரப்பிக் கொண்டுதான் இருக்கிறது! அதனை மறந்துவிட்டு அவர் படத்தை மட்டும் வைத்துக் கொண்டு, பல பிரிவுகள்... இன்றைய நிலைமை புரியாமல் சிதறிக்கிடப்பதும் சீரழிவுக்கு வழி செய்வதும் தவறு.

தமிழ்நாட்டை... அதன் அளப்பரிய வளர்ச்சியையும்... பொறுக்காத ஆன்மீக ஒன்றிய அரசு... ஜனநாயகத்தை கொன்று... தமிழ் மாநிலத்தை சீர்குலைக்க முயல்கிறது. அப்படி நடக்காமல் கழகத்தையும், அண்ணா கண்ட, தமிழ்நாட்டையும் காத்திட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் போராடுகிறார். இதனை உணர்ந்து நாம் அனைவரும் அண்ணாவின் தம்பிகளாய் கைகோர்த்து ஓரணியில் இணைவோம். ஆரிய திராவிட யுத்தத்தை 2026இல் எதிர்கொள்வோம். திராவிடம் வென்ற பின் நம் கணக்குகளை கூடிப் பேசி தீர்ப்போம்.

அண்ணா நாமம் வாழ்க!



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்



திருவாரூரில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் நன்னிலம் வடக்கு ஒன்றியத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சியை சேர்ந்தவர்கள், மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். ஒன்றிய செயலாளர் கேப்டன் செல்வராஜ், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பாலமுத்து உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் வேளாங்கண்ணியில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் சபரிதேவன் தலைமையில் 28 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி கீழையூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவருமான தாமஸ் ஆல்வா எடிசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.பி.டி.சார்லஸ், மாவட்ட பிரதிநிதி மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா ,பேரூராட்சி மன்ற உறுப்பினர் வெற்றிவேல்,முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.